
திருவாசகம் - 42
சென்னிப்பத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# சென்னிப்பத்து கதை வடிவில்

## சிவ விளைவு

## திருப்பெருந்துறையில் அருளியது

**தேவ தேவன்மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்**

**மூவ ராலும் அறியொணாமுத லாய ஆனந்த மூர்த்தியான்**

**யாவ ராயினும் அன்பரன்றி அறியொ ணாமலர்ச் சோதியான்**

**தூயமாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி மன்னிச் சுடருமே 01**

“சிவன், சிவன் என்று புலம்புபவர்கள் ஊரில் பலர் இருக்கிறார்கள். இரண்டொருவர் நல்ல வசதிகளுடனும் இருக்கின்றனர். ஆனால் பலர் துன்பப்படுகின்றனர். முயற்சிதான் எல்லாவற்றிற்கும் காரணமே தவிர கடவுள் பக்தி அல்ல. பக்தி எதையும் வளர்க்காது வறுமையைத்தான் கொடுக்கும். சிவன் தானென்று சொல்லி ஊர் முழுக்கக் கத்திக்கொண்டு திரிந்த சிவசம்புவை அவர்களது பிள்ளைகள் கூடக் கவனிக்கவில்லை. விசர் முற்றி ஊர் ஊராக அலைந்த அந்த மனிதன் எங்கே போனான், என்னவானான் என்று யாருக்கும் தெரியாது. கதிரேசண்ணையைப் போன்றவர்கள் அவர் சிவபக்தி முற்றி முத்தியடைந்து விட்டார் என்று கூறுகின்றனர். கண்ணால் காணாதவை எல்லாம் பொய்யானவை. நம்பமுடியாதவை. பல்கலைக்கழகத்தில் மிகத் திறமையாகக்கற்று மிகவும் மதிப்புள்ள வேலையில் அமரப்போகும் நீ சிவன் சிவன் என்று கத்திப் பைத்தியமாகாதே. அருமையான சந்தர்ப்பம் உனக்குக் கிடைத்துள்ளது. நல்ல அழகான பணக்காரப் பெண் உன்னை விரும்புகிறாள். அவர்களின் குடும்பமும் உன்னை விரும்புகிறது. அதனால் அகல்யாவைத் திருமணம் செய்து இன்பமாக வாழ்” என்றான் வாகீசன்.

நடராசா பலமாக வெகுநேரம் சிரித்தான். பின்; “வாகீசா எந்த நிறக் கண்ணாடியை அணிகின்றோமோ அணியும் நிறத்தையே சுற்றாடலில் உள்ள பொருட்கள் காட்டும். நீ நாத்திகம் என்ற கண்ணாடியை அணிந்துள்ளாய். அதனால் காணும் பொருட்கள் யாவும் தவறாகத்தான் தெரிகின்றன. ஜீவபோதத்துக்குள்ளான மும்மூர்த்தி-களுக்கும் விளங்காத மகாதேவனின் பெருமை உனக்கு எப்படி விளங்கும். மகாதேவனான சிவனை வணங்குபவர்களுக்குத்தான் சிவனின் அருமை தெரியும்.

அவனது வல்லமையும் தெரியும். எதுவும் இல்லாத எனக்குச் சிவன் அருளிய பின்புதானே மாமா தனது மகளைத் தர விரும்பகிறார். அதனால் தானே கதிரவேற்பிள்ளை வேலைக்காரன் என்ற பாராது என்னைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து தர விரும்புகிறார். இது சிவனின் அருள் இல்லையா…?" என்று கேட்டான் நடராசா.

**அட்டமூர்த்தி அழகன்இன்னமு தாய ஆனந்த வெள்ளத்தான்**

**சிட்டன் மேய்ச்சிவ லோகநாயகன் தென்பெ ருந்துறைச் சேவகன்**

**மட்டு வார்குழல் மங்கை யாளையோர் பாகம் வைத்த அழகன் தன்**

**வட்ட மாமலர்ச் சேவடிக் கண்நம் சென்னி மன்னி மலருமே 02**

"தர்க்கரீதியாக உன்னால் சிவனின் இருப்பை நிறுவ முடியுமா? கண்ணால் காணாதவையெல்லாம் கற்பனைகள். அவையாவும் நம்பக்கூடியவை அல்ல" என்றான் வாகீசன்.

"ஓம், பிரச்சினை இல்லை. கண்ணால் காணாதவையெல்லாம் கற்பனை என்றால் நீ காற்றைக் கண்டாயா? வெப்பத்தைக் கண்டாயா? நறுமணத்தைக் கண்டாயா? ஒன்பது கோள்களில் சூரியனையும், சந்திரனையும் தவிர வேறு எதையாவது கண்டாயா? சந்திரனுக்கு மனிதன் சென்றதை யாரும் காணவில்லை. இப்போ அது பொய் என்கின்றனர். இப்படிக் காணாதவையெல்லாம் கற்பனை என்றால் அவை இருக்கக்கூடாது. ஆனால் இருக்கின்றனவே. உனது தாய் உன்மீது உயிரையே வைத்திருக்கிறாள் என்பாய். அந்த உயிரைக் கண்டாயா..? உயிரின் வடிவம் என்ன…? அது எங்கேயுள்ளது. உடலின் உறுப்புக்களையெல்லாம் படம் பிடித்து அவற்றில் உள்ள குறைபாடுகளை நீக்குகிறார்களே. அப்படிப் படம் பிடிக்கும்போது உயிரைப் பிடிக்க முடியாதிருக்கிறதே. பல விடயங்களை நாம் உணர்வுகளால்தான் உணர்ந்து கொள்ள முடியுமே தவிரக் காணமுடியாது. உனக்கு நம்பிக்கையில்லாவிட்டால் அதை உன்னோடு வைத்துக்கொள். நான் ஒருபோதும் உன்மீது திணிக்கமாட்டேன். நாத்திகம் பேசிய பலர் இப்போ செடில் குத்திக் காவடி எடுக்கின்றனர். உனது நிலையும் அதுபோல ஒரு நாள் மாறும். அவன் அட்டமூர்த்தி, மீனாட்சி சுந்தரேசன். அவனை வணங்குவதால் பேரானந்தம் ஊற்றெடுத்து எனது துன்பங்களையெல்லாம் அடித்துச் சென்றுவிடுகிறது. இதை நம்பச்சொல்லி உன்னைக் கேட்க மாட்டேன்" என்றான் நடராசா.

**நங்கை மீரெனை நோக்குமின் நங்கள் நாதன் நம்பணி**

**கொண்டவன் தெங்கு சோலைகள் சூழ்பெருந் துறை மேய சேவகன்**

**நாயகன் மங்கை மார்கையில் வளையுங்கொண்டெம் உயிருங்**

**கொண்டெம் பணிகொள்வான் பொங்கு மாமலர்ச் சேவடிக்கண்நம்**

**சென்னி மன்னிப் பொலியுமே 03**

"வாகீசா, எமக்குக் கற்பித்த ஐங்கரன் என்ற ஆசிரியர் கடவுளை நம்பாதவர். அவர் மாணவர்களுக்குக் கடவுளைப் பற்றித் தவறாகத்தான் கற்பிப்பார். அதைச் சில மாணவர்கள் நம்பி ஊர்க்கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களைக் குழப்பினர். ஊரவர் அதை அறிந்து மிக்க கவலை கொண்டு ஐங்கரன் ஆசிரியரிடம் சென்று பணிவாக மாணவர்களுக்குத் துர்ப்போதனை செய்ய வேண்டாம்" என்றனர். அதை அவர் கேளாது தொடர்ந்து துர்ப்போதனைகள் செய்தமையால் ஒரு நாள் இரவு பலரும் ஒன்று சேர்ந்து ஐங்கரன் ஆசிரியரை மிகவும் மோசமாகத் தாக்கிவிட்டனர். அதை அறிந்து விசாரணை செய்த கல்வி அமைச்சு அவரை எச்சரித்து வேறுபாடசாலைக்கு மாற்றியது. இது சரியென்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் ஒரு ஆசிரியர் பாடங்களை அல்லது வேறு விடயங்களைக் கற்பிக்கும்போது மிகவும் அவதானமாகக் கற்பித்தல் வேண்டும். பிள்ளைகள் கற்று முடிந்து உரிய பருவம் வரும்வரை எதையும் திணிக்கலாகாது. இதைப் புரிந்து கொள்ளாதது ஐங்கரனின் குற்றம். அதுபோல ஒருவரின் நம்பிக்கையை கேலி செய்வதும் குற்றமாகும். மாணிக்கவாசகர் அல்ல பெரும்பான்மையான அறிஞர்கள் பெண்களுக்குத்தான் அறிவுரை வழங்குவர். ஏனென்றால் தாய்தான் பிள்ளைகளோடு அதிக நேரம் பழகுபவள். தந்தை தொழில் நிமித்தம் பிறவூரும் செல்லலாம். அத்துடன் ஒரு விடயத்தைத் தாய் அன்பினால் கையாளுவாள். தந்தை அதிகாரத்துடன் கையாளுவான். அதற்காகத்தான் மாணிக்கவாசக சுவாமிகள்; "அழகான மாதர்களே, எம் இறைவன் எம்மை பணி கொண்டுள்ளான். மாதர்களின் கை வளையல்களையும் நமது உயிரையும் அவன் கவர்ந்துள்ளான். அவ் இறைவனுடைய திருவடிகள் நமது தலையில் நிலைபெற்றிருப்பன ஆகுக" என்கிறார். உயிரைப் பெண்ணாகவும், இறைவனை ஆணாகவும் கருதுவது சைவசமயத்தின் மரபு. வளையல் நீங்குவது உடல் உணர்வைக் கடந்ததற்கு அறிகுறியாகும். உயிர் நீங்குவது சிவபோதம். சிவபோதமாக மாறுவதற்கான அறிகுறியாகும். இதெல்லாவற்றையும் நீ நம்பமாட்டாய். முன்பு நம்பாத ஐங்கரன் ஆசிரியர் ஓய்வு பெற்ற பின்பு திருவாசகத்தைக் கோவிலில் படிக்கிறார். நீயும் ஒருகாலம் படிப்பாய்" என்றான் நடராசா.

**பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்துபார்ப் பானெனச்**

**சித்தர் சூழச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ்செய்வான்**

**எத்தனாகிவந் திவ்புகுந்தெமை ஆளுங் கொண்டெம்**

**பணிகொள்வான் வைத்த மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி**

**மன்னி மலருமே** **04**

“வாகீசா, பக்தர்களும், சித்தர்களும் வாழ்ந்த நாடு இது. உனது தந்தையார் எமது ஊரில் வாழ்ந்த தேங்காய்ச் சித்தரின் சீடர். அவரின் பெயர், ஊர், பிறப்பு வளர்ப்பு எதுவும் தெரியாது. ஒரு நாள் இரவு வந்து எமது ஊர்ச் சிவன்கோவிலின் தேர்முட்டிக்கு அருகில் நின்ற வேப்பமரநிழலில் அமர்ந்து விட்டார். பின் நாற்பது வருடங்கள் அம்மரநிழலில் தான் வாழ்ந்தார். அவர் சிவனுக்கு அடிக்கும் தேங்காய்ச் சொட்டை விரும்பி உண்டமையால் தேங்காய்ச் சித்தர் என மக்களால் அழைக்கப்பட்டார். அவருக்கு உனது தந்தைதான் சேவகம் செய்பவர். அவர் திருமணமானபின் பத்து வருடங்கள் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் மனம் வருந்திய உனது தகப்பனாருக்கு, “அடுத்த பங்குனி மாதம் ஒரு மகன் பிறப்பான். அதன்பின் மூன்று பிள்ளைகள் பிறப்பார்கள் என்று சொன்னவராம். இப்பவும் உனது தந்தை அதைச் சொல்வார். அதுவும் பொய்யா…? மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “பக்தர்களும் சித்தர்களும் சூழ்ந்து நின்று வணங்கும் சிவபெருமான் தில்லையில் கூத்தாடுபவன். அவன் என்னை வலியத் தேடிவந்து எனது உடலைத் தடவி ஆட்கொண்டவன். அதனால் அவனது திருவடிகளில் நம் சிரசுகள் பொருந்தி நிற்கட்டும்” என்கிறார். இது பொய்யாக இருக்கட்டும். உனது தந்தை தேங்காய்ச் சித்தரின் பாதங்களைத் தூக்கித் தனது தலையில் வைத்து நிழற்படம் எடுத்து வீட்டில் தொங்கவிட்டுத் தினமும் பூசை செய்கிறார். அவரது நம்பிக்கையை உன்னால் தடுக்க முடியுமா…? நம்பிக்கை என்பது உணர்வுகளில் ஊறி உடலில் கலந்தது. அதை மாற்றுவது கடினம். உனது நம்பிக்கை ஒருநாள் மாறும். ஆனால் உனது தந்தையின் நம்பிக்கை மாறும் என்று நீ என்னைப் போலத் திடமாகச் சொல்வாயா…?” என்று கேட்டான் நடராசா.

**மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்திடா வகை**

**நல்கினான் வேய தோளுமை பங்கன் எங்கள் திருப்பெ**

**ருந்துறை மேவினான் காயத் துள்ளமு தூறஊறநீ கண்டு**

**கொள்ளென்று காட்டிய சேய மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி**

**மன்னி திகழுமே** **05**

“வாழ்க்கை என்பது வாழ்வதற்காக. அதுவும் இன்பமாக வாழ்வதற்காக சரி உனது சிவனால் தான் அது கொடுக்கப்பட்டது என்று வைத்தாலும் இன்பமாக வாழ நினைக்காது ஏன் துன்பப்பட வேண்டும்?” என்று கேட்டான் வாகீசன்.

“உலகில் எதை இன்பம் என்று நீ சொல்கிறாய். இன்பமெல்லாம் சிறிது காலம்தான். துன்பங்கள் தான் இன்பம் என்ற மாயத் தோற்றத்தில் வருகின்றன. ஒருவன் காதலித்த பெண்ணைக் கைப்பிடிப்பதுதான் இன்பம் என்று நினைக்கிறான். திருமணமான சில நாட்களுக்கு அது இன்பமாக இருக்கும். அதன்பின் அவை யாவும் பெரும் துன்பங்களாக மாறும். பிறப்பது துன்பம், வாழ்வது துன்பம். இறப்பது துன்பம் ஏனென்றால் இறப்பு பின் பிறப்பாகிறது. காதலித்துத் திருமணம் செய்த எத்தனைபேர் மகிழ்வுடன் வாழ்கின்றனர். பிள்ளை இல்லை என்று துன்பப்படுகின்றனர். பிள்ளை நோயாளியாகப் பிறந்தால் அதுபோலத் துன்பம் வேறில்லை. இப்படியாக மனிதன் செய்யும் செயல்கள் யாவும் துன்பத்தில் தான் முடிகின்றன மாயமான, பிரபஞ்ச வாழ்வை மெய்யென்று நினைக்காதபடி எனக்குச் சிவன் கிருபை செய்தான். உமாதேவியாரை இடப்பக்கத்தில் வைத்திருக்கும் சிவன் எனது உடம்பினுள் அமுது சுரக்கக் காட்டியருளினான். அதனால் அவனது திருவடிகளில் எனது தலை படியட்டும்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இந்த உலகம் பொய்யானது. யார் அன்பை மதிக்கிறார்கள். யார் ஒழுக்கமாக வாழ்கிறார்கள். யார் பற்றற்று வாழ்கிறார்கள். எல்லாம் பொய். பெற்றோர் பிள்ளைகளை வளர்ப்பது தமது நன்மைக்காக. அதனால் தான் ஆண்பிள்ளைகளைப் பெற்றோர் அவர்களை அதிக விலைக்கு விற்க அவதிப்படுகின்றனர். பெண்பிள்ளைகளைப் பெற்றோர் சீதனம் கொடுப்பதற்காக உண்ணாமல், உறங்காமல் பணத்தைச் சேர்க்கின்றனர். பணம், பொருளைத் தேடித் தேடி அலைவது துன்பமில்லையா..? ஒரு பெண்ணை ஒரு ஆண் எந்தவிதமாதன சொத்துமின்றி எப்போ திருமணம் செய்கிறானோ அப்போது அன்பு வளரும். பொருளின் தேவை அற்றுப்போகும். பெண்ணைப் பெற்ற தந்தை மகிழ்வுடன் பொருள் தேவையில்லை என்று வாழ்ந்தால் துன்பங்கள் இராது. இந்த நிலை வருமா..? நீ ஒரு பெண்ணை எந்தவிதமான பொருளுமின்றித் திருமணம் செய்வாயா…? இப்படி ஆயிரம் துன்பங்கள் தினமும் வாழ்வில் வரும். சிவனைத் தஞ்சமடைந்தவனுக்குத் துன்பம் வராது. ஏனென்றால் பற்றற்றவன் தான் சிவனைத் தஞ்சமடைவான்” என்றான் நடராசா.

**சித்தமே புகுந் தெம்மையாட் கொண்டு தீவினை கெடுந்**

**துய்யலாம் பத்தி தந்துதன் பொற்கழற்கணே பன்மலர் கொய்து**

**சேர்த்தலும் முத்தி தந்திந்த மூவுலகுக்கும் அப்பு றத்தெமை**

**வைத்திடும் அத்தன் மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி**

**மன்னி மலருமே. 06**

வாகீசனின் தந்தை வாகீசனைத் தேடி நடராசாவின் வீட்டுக்கு வந்தார்; "தம்பி அடுத்தவாரம் தேங்காய்ச் சுவாமியாரின் முப்பதாவது சிரார்த்த தினம் வருகிறது. அவர் பெரும் சிவபக்தர், அவர் சொல்வார்; "சிவன் எனது மனதைக் கோவிலாக்கி எனது வினைகளை நீக்கி, பக்தியை வளர்த்து முத்தியை அருளிய பித்தன். அவனது திருவடியில் எனது தலையை வைத்து உறங்கியுள்ளேன். அதனால் சிவனைப் போற்று" என்பார். அவரின் அருளால் தான் நீ பிறந்தனீ. சாதாரணமான தொழிலாளியாக இருந்த எனக்குக் கல்வியை ஊட்டி என்னைப் பரீட்சை எடுக்கப்பண்ணி உயரதிகாரியாக்கியவர். அவர் சிவனை வணங்கிவிட்டு தனது அடியார்களுக்கு ஏதாவது சொன்னால் அப்படியே நடக்கும். உனக்கு இருபத்தைந்தாவது வயதில் பெரியதொரு தொழில் கிடைக்கும் என்றவர். இப்போ கடிதம் வந்திருக்கு. என்னவென்று பார்" என்றொரு தபால் உறையைக் கொடுத்தார். அதை வாங்கிப் படித்த வாகீசன் "அப்பா எனக்கு வங்கியில் வேலை கிடைத்துள்ளது. பெரிய வேலை. இதை நான் எதிர்பார்க்கவில்லை" என்றான்.

"நான் முன்பே சொன்னேன். சிவனின் அருள்பெற்ற தேங்காய்ச் சாமியார் உனக்கு இருபத்தைந்து வயதில் எதிர்பாராத ஒரு உயர்ந்த உத்தியோகம் கிடைக்கும் என்று. இப்போ உனக்கு இருபத்தைந்து வயது. அவர் சொன்னது எதுவும் என் வாழ்நாளில் நடைபெறாது விட்டதில்லை. இம்முறை அவரது ஜெயந்திக்குச் சிவனுக்குப் பெரியதொரு அபிஷேகம் செய்தல் வேண்டும். அதற்கான செலவு முழுவதும் உன்னுடையதாக இருத்தல் வேண்டும். நீ அவரை எமது குலதெய்வமாகப் போற்ற வேண்டும். அவர் ஆராதித்த சிவலிங்கத்தை நீயும் ஆராதித்தல் வேண்டும். அப்படிச் செய்து வந்தால் பெரிய அதிகாரியாக வருவாயென்றும் சொன்னவர். வேலை கிடைத்த மறு மாதமே திருமணம் நல்ல இடத்தில் ஒப்பேறும் என்றும் சொன்னவர். அதுவும் நிறைவேறியது போலத்தான் உள்ளது. பெரும் வர்த்தகரான பொன்னம்பலம் தனது மகள் சாந்தினியை உனக்குத் திருமணம் செய்யும்படி கேட்டுத் திரிகிறார். நான் எதுவும் சொல்லவில்லை. உனது சம்மதமின்றி நான் அதைப் பற்றிக் கதைக்க விரும்பவில்லை" என்றார் தம்பிராசா.

**பிறவி யென்னுமிக் கடலைநீந் தத்தன் பேரருள்தந் தருளினான்**

**அறவை யென்றடி யார்கள் தங்கள் அருட்கு ழாம்புக விட்டுநல்**

**உறவு செய்தெனை உய்யக்கொண்ட பிரான்தன் உண்மைப்**

**பெருக்கமாம் திறமை காட்டிய சேவடிக்கண்நம் சென்னி மன்னி**

**திகழுமே** **07**

"வாகீசா, தேங்காய்ச் சித்தர் மகான், சிவனின் அருளை முழுமையாகப் பெற்றவர். அவரது வாக்குச் சிவனின் வாக்காகும். அவர் யோகத்தில் அமர்ந்தால் சிரிப்பார், கதைப்பார், எழுந்து நடப்பார். இது எவையும் அவருக்குத் தெரியாது. நான் திருமணமாகிப் பத்து வருடங்கள் பிள்ளைகள் இல்லாதிருந்தேன். தேங்காய்ச் சித்தர் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. கதிரேசன் முழு நம்பிக்கை வைத்திருந்தார். அவர்தான் என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்றார். என்னைக் கண்டதும், "ஏன் இங்கு வந்தாய். என் தெய்வத்தின் மீதும், என்மீதும் உனக்கு நம்பிக்கை இல்லை. அதற்காகத் தான் பிள்ளைக்காக மருத்துவர்களையும், சூனியக்காரர்களையும் நம்பினாய். இப்போ ஏன் வந்தாய்? இப்போதும் உனக்குச் சிவனில் நம்பிக்கை இல்லை. அவனைப் பூரணமாக நம்பியபின் வா" என்று கூறினார். பிள்ளை இல்லாமையால் வருந்திய நான் சிவனை நம்பித் தொண்டு துரவு செய்தேன். தேங்காய்ச் சாமியாரிடம் சென்றேன். ஒரு நாள் அவர் உனக்குச் சிவன் பிள்ளைவரம் தந்துவிட்டான். அடுத்த வருடம் பங்குனி மாதம் 25ம் திகதி உனது கையில் பிள்ளை இருக்கும்" என்றவர். அதன்படி நீ பிறந்தாய். அது ஒரு அற்புதமான செயல். நான் தேங்காய்ச் சாமியாரிடம் சென்று வருவதைப் பரிகசித்த உனது மாமன் பின்னாளில் அவரது திருவடிகளைக் கழுவுமளவிற்கு வந்துவிட்டான். அவர் சொல்வார்; "மகனே, சிவன் தான் மாணிக்கவாசக சுவாமிகளாக அவதரித்தவர். அவர் சொல்வார்" பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தனது அருள் என்ற கப்பலை அப்பனான சிவன் கொடுத்தருளியுள்ளான். அத்துடன் அனாதையாகத் தேடுவாரற்று இருந்த என்னைத் தனது அடியார் கூட்டத்தோடு சேர்த்து வைத்தான். இப்போ அவனது திருவடியில் என்னைத் தலைவைத்துத் தூங்கவும் அனுமதித்துள்ளான்" என்பார். நானில்லாத காலத்திலும் நீ அவரைப் போற்ற வேண்டும்" என்றார் தம்பிராசா.

**புழுவி னாற்பொதிந் திடுகுரம்பையிற் பொய் தனையொழி**

**வித்திடும் எழில்கொள் சோதியெம் ஈசனெம்பிரான் என்னு**

**டையப்பன் என்றென்று தொழுத கையின ராகித் துய்மலர்க்**

**கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு வழுவி லாமலர்ச்**

**சேவடிக்கண்நம் சென்னி மன்னி மலருமே. 08**

தேங்காய்ச் சித்தரின் ஜெயந்தி தினம் ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டபோது பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். அப்போது கதிரேசன் உரையாற்றினார்; "சிவனடியார்களே, தேங்காயை விரும்பிச் சித்தர் உண்பதால் அவரைத் தேங்காய்ச் சித்தர் என மக்கள் அன்போடு அழைப்பர். அவர் மாணிக்கவாசக சுவாமிகளைச் சிவன் என்று சொல்லி வணங்குவார். திருவாசகத்தை விரும்பிப் படிப்பார். திருவாசகத்தைப் பாடிவிட்டு அவர் சொன்னால் சொன்னபடி நடக்கும். இது ஊரவர் எல்லோருக்கும் தெரியும். அவர் இவ்வுலக வாழ்க்கையையும், மாணிக்கவாசகரது திருவாசகத்தையும் இணைத்தே எப்போதும் பேசுவார். மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதை அவர் அடிக்கடி நினைவுபடுத்துவார். "இந்த உடம்பு ஒரு புழுக்கூடு. உடம்புக்குள் ஆயிரக்கணக்கான புழுக்கள் வசிக்கின்றன. உடலில் ஒரு புண்வந்து மாறாவிட்டால் அதில் புழுக்கள் வந்து கூடிவிடும். அப்புழுக்கூட்டின் உணர்வுகளை அகற்றுபவன் ஆத்மஜோதியான என் அப்பன் சிவன். அவனை மாறாத அன்புடன் பற்றுக்களற்று கண்ணீர் சிந்தி வழிபடும் மெய்யடியார்களுக்கு முத்தியை வழங்குவான். சாதாரணமான சிவனடியார்கள் அவனை மெய்யன்புடன் துதித்தால் அவர்களது வேண்டுகோள் நிறைவேறும் என்பது உங்களுக்குத் தெரியும். தேங்காய்ச் சுவாமியார் மக்களோடு இருந்து அவர்களுக்குச் சிவனின் அருளையூட்டிச் சிவபக்தர்களாக்கியவர். அதனால் தான் இன்று ஆச்சிரமத்தில் ஊரே கூடியுள்ளது. அவரின் சிறந்த பக்தர் தம்பிராசா அவர்கள். அவர்தான் அவரோடு இறுதிவரை கூட இருந்து சேவை செய்தவர். அதனால் அவரது அருட்பார்வை அவர்மீது படிந்திருக்கிறது. எல்லாம்வல்ல சிவன் தன்னடியார்களுக்கு எல்லா வழிகளிலும் உதவுவான் என்று மக்களை நம்பப் பண்ணியவர். நம்பிய மக்கள் அதனால் பயனடைந்தமையால் தான் இன்று அவர்கள் அவரது ஜெயந்தி தினத்தை மிகமிக விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். அவர் மறைந்து பல வருடங்களானாலும், அவரின் நினைவு எல்லோரது ஆன்மாவிலும் தங்கியிருக்கிறது" என்றார்.

**வம்ப னாய்த்திரி வேனைவாவென்று வல்லி னைப்பகை**

**மாய்த்திடும் உம்ப ரான்உல கூடறுத்தப் புறத்தனாய் நின்ற**

**எம்பிரன் அன்பரானவர்க்கருளி மெய்யடி யார்கபட் கின்பந்**

**தழைந்திடுஞ் செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி**

**மன்னி திகழுமே. 09**

அடுத்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றினார்; "எனது கடந்த காலம் மிகவும் கொடுமையானது. நான் சிவத்துரோகங்கள் பலவற்றைச் செய்து வந்தேன். சுருங்கச் சொன்னால் ஒரு வம்பனாகவே நான் வாழ்ந்து வந்தேன். சுமார் அறுபது வருடங்களுக்கு முன் எனது ஊருக்கு வந்த தேங்காய்ச் சித்தர் எமது ஊர்ச் சிவன்கோவிலில் தங்கியிருந்தார். நான் கோவிலுக்கு வரும் ஒரு கன்னிப்பெண்ணுடன் தகாத முறையில் நடக்க அதைத் தேங்காய்ச் சித்தர் கண்டுவிட்டு என்னைத் தனிமையில் அழைத்துச் சென்று சொன்னார்; "மகனே, உலகில் உள்ள பொருட்கள் அனைத்தையும் சிறப்பாகப் பெண் தெய்வமான அன்னை பார்வதியின் பெயரால் அழைப்பது வழமை. அது சிவனின் கட்டளை. நதிகளைக் காவேரி, கங்கை, சிந்து என்றும், பூமியைப் பூமாதேவி என்றும் கல்வியைத் திருமகள் என்றும், பணத்தை லட்சுமி என்றும் இறைவியின் நாமத்தால் அழைத்துப் பெண்களைப் பெருமைப்படுத்துவது சைவசமயம். சைவசமயத்தைப் போற்றுபவன் பெண்களையும் போற்ற வேண்டும். சிவன் உமையைத் திருமணம் செய்ததுபோல, நீயும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து ஒழுக்கமாக வாழ்வதையே சிவன் விரும்புவார். மாணிக்கவாசக சுவாமிகள் அதைப்பற்றி இவ்வாறு சொல்கிறார்; "வம்பனாகத் திரிந்த என்னை வா என்று அழைத்துச் சென்று எனது வலிகளை அகற்றிய பெரியவன் அவன். அத்தகைய பெரியவனான அவன் உலகெங்கும் வியாபித்திருக்கிறான். அதற்கு அப்பாலும் இருக்கிறான். தனது மெய்யன்பர்களான சிவனடியார்க்கு அவன் அமிழ்தம் போன்றவன். அவனது திருவடியில் தலைசாய்த்திருக்கவே மெய்யடியார்கள் விரும்புவர்" என்று கூறிச் சிவனது பெருமைகளை எடுத்துரைத்தார். அதனால் எனது மனம் மாறியது. அதனால் எமது ஊரில் இருக்க விரும்பாது நான் புறப்பட்டேன். என்னுடன் சித்தரும் இங்கு வந்தார். அவர் யார் எந்த ஊரவர் என்று நானும் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை. அவர் இங்கேயே தங்கி இவ்வூரவர்க்குச் சிவசேவை செய்யும்படி என்னிடம் வேண்டினார். அவரது விருப்பத்திற்காகவே நான் இங்கு தங்கியிருக்கிறேன். அவரது ஆத்மா என்னை வழி நடத்துகிறது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**முத்த னைமுதற் சோதியைமுக்கண் அப்பனை முதல்**

**வித்தனைச் சித்த னைச்சிவ லோகனைத்திரு நாமம்பாடித்**

**திரிதரும் பத்தர் காள்இங்கே வம்மின்நீர் உங்கள் பாசந்தீரப்**

**பணிமினோ சித்த மார்தருஞ் சேவடிக்கண்நம் சென்னி மன்னி**

**திகழுமே. 10**

"சிவனடியார்களே, சிவன் நித்திய முத்தனாவான். அவன் உலகெங்கும் பரஞ்சோதியாகப் பரந்து வியாபித்துள்ளான். அவன் முக்கண்ணன். அத்துடன் முதல் வித்தானவன். அந்த வித்தில் இருந்துதான் உலகங்களும், அண்டங்களும், அவற்றில் உள்ள பொருட்களும் தோன்றின. அவனை வாலறிவன் என்றும், சிவலோகன் என்றும் மக்கள் அழைப்பர். அவனைப் பாடிப்பணிந்து வணங்குகின்ற அன்பர்களே, ஒன்றுகூடி இங்கே வாருங்கள். உங்களது பற்றுக்கள், பந்தங்கள், பாசங்கள் அனைத்தையும் அழிக்கும்படி அவனை இரந்து வணங்குங்கள். அப்படி வணங்கினால் உங்களது தலை சிவனது திருவடியை அடைந்து இன்பத்தை அனுபவிக்கும்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லியவற்றை அடிக்கடி சொல்வார். அதனால் சிவனடியார்களே, நீங்கள் தேங்காய்ச் சித்தரில் அன்பு கொண்டிருந்தால், அவரைக் குருவாக ஏற்றிருந்தால், அவரின் சொற்படி சிவனை மெய்யன்புடன் வணங்குங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

*திருச்சிற்றம்பலம்.*